1974 மார்ச் 20]

ஈட்டுறுதி மருத்துவமனை துவக்கப்பட்டது. அம்மருத்துவமனையில் எஞ்சிய 200 படுக்கை வசதிகளைத் தொடங்கிவைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. என். குமாரசாமி: இந்த மருத்துவ மனையில் இடப் பற்றுக்குறை காரணமாக சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறவர்கள் இட நெருக்கடி காரணத்தாலே பாதி சிகிச்சையோடு வெளியே அனுப்பப்படுகிறார்கள். எனவே, 500 படுக்கைகள் கொண்டதாக இதை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தமிழக அரசைப் பொறுத்த வரை 1,000 தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு 4 படுக்கைகள் போதாது; குறைந்தது 7 படுக்கைகளாவது வேண்டுமென்று மத்திய அரசுக்குத் தாக்கீது அனுப்பியிருக்கிறோம். பதில் கிடைத்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குடிசை மாற்று வாரியம் கட்டியுள்ள வீடுகள்.

* 523 வினா—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1973 ஏப்ரல் முதல் அக்டோபர் முடிய குடிசை மாற்று வாரியம் கட்டி முடித்துள்ள வீடுகள் எத்தனை?

(இ) எவ்வளவு முதலீடு செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) 2,566 வீடுகள்.

(இ) ரூ. 186.12 லட்சம்.

திரு. சோ. அழகர்சாமி: குடிசை மாற்று வாரியத் திட்டத்தின் கீழ் கட்டப்படக்கூடிய வீடுகள் அங்கு எவ்வளவு குடிசைகள் இருந்தனவோ அந்த அளவுக்குத்தான் கட்டப்படுகிறதா அல்லது அதிகமாகக் கட்டப்படுகிறதா? அதிகமாகக் கட்டப்படுவதாக இருந்தால் அவை எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: குடிசை மாற்று வாரியப் பகுதியில் மிகுதி இடம் இருந்தாலும் சில இடங்களில் அதிக வீடுகள் கட்டப்பட்டால் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் 250 ரூபாய் சம்பளம் பெறுகிறவர்களுக்கு அந்த வீடுகள் ஒதுக்கப் படவேண்டுமென்று அரசு தீர்மானித்திருக்கிறது.

[1974 மார்ச் 20

திரு. எம். சுரேந்திரன் : குடிசைமாற்று வாரியத்தின் மூலம் கட்டப்படுகிற இந்தக் குடிசை வாசிகளுக்கான வீடுகள் சென்னை நகரத்தில் எவ்வளவு காலத்திற்குள்ளாக பூர்த்தியாகும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தமிழக அரசுத் திட்டப்படி எழு ஆண்டுகளுக்குள்ளாக இது பூர்த்தியாக்கப்படவேண்டிய ஒன்று.

திரு. வை. பாலசுந்தரம் : குடிசைமாற்று வாரியம் மூலம் கட்டித்தரப்படுகிற வீடுகளுக்கு வாடகை வசூலிக்கிற நேரத்தில் சில நேரங்களில் தாமதப்படுத்துகிறார்கள். அப்படித் தாமதப் படுத்தி பத்து பனிரெண்டு மாதங்களுக்கு வசூலிக்கும்போது ஹரிஜன மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவிக்கிறேன். அதே நேரத்தில் மொத்தமாக அவர்களிடத்தில் வாடகையை வசூலிப்பதை விட—மொத்தத்தில் பத்து அல்லது பன்னிரண்டு மாத வாடகையைக் கட்டுவது என்பது கஷ்டமான தோன்றும்—சிறுகச் சிறுக நாலைந்து தவணைகளாக வசூலிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : குடிசைமாற்று வாரியத்தில் வாடகை இரண்டு மாதக் காலத்திற்குத்தான் நிலுவை இருக்க ஏற்பாடு இருக்கிறதே தவிர பத்து அல்லது பன்னிரண்டு மாதங்கள் வாடகை வாங்காமல் விட்டு விட்டு அதற்குப் பின் தவணை முறையில் வசூலிப்பது என்று வைத்தால் எங்கு போய் முடியும் என்று சொல்ல முடியாது. அந்த வகையில் வாடகைப் பாக்கி இல்லாமல் வாங்க இந்த அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : கட்டப்பட்டிருக்கிற வீடுகள் எந்த அடிப் படையில் ஒதுக்கப்படுகின்றன? மஹாராஷ்ட்ரம், வங்காளம், அஸ்ஸாம், பீஹார் போன்ற மாநிலங்களில் ஸன்ஸ் ஆப் தி ஸாயில், அந்த நாட்டு மக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிற அந்தக் கொள்கைப்படி 80 சதவீதம் வரை கொடுக்கிறார்கள். ஆனால் நம் நாட்டில் கட்டப்படுகிற வீடுகள் கோயம்புத்தூர் போன்ற பகுதியில் 80 சதவீதம் மற்றவர்களுக்கு, இந்த நாட்டைச் சாராதவர்களுக்கு கேரளத்தில் இருந்து வந்தவர்களுக்கு முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இப்படிப்பட்டவர்களுக்கு

வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. இதற்குக் காரணம் என்ன? இனியாவது இந்த நாட்டு மக்களுக்கு இப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுப்பதற்கு நம் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் யார் யார் குடிசைகளில் அந்தந்தப் பகுதிகளில் இருந்து வந்தார்களோ அவர்களுக்குத் தான் 'வீடே தவிர 'ஸன்ஸ் ஆப் தி ஸாயில்' தியரியை நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை.

Electricity Schemes in North Arcot District

* 524 Q.—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the Rural Electrification Corporation Limited has undertaken to finance the power supply at North Arcot district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) இதுவரையில் வட ஆற்காடு மாவட்டத்திற்கு 176.722 இலட்சம் மதிப்புள்ள நான்கு கிராம மின்மய திட்டங்களும் (Rural Electrification Schemes), மேலும் பல்வேறு திட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன.

வேடந்தாங்கல் பறவைகள் உய்விடம்.

* 525 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள வண்ணப்பறவைகள் கூடும் வேடந்தாங்கலைச் சுற்றுலாத்துறையின் கீழ் மேம்படுத்த என்னென்ன திட்டங்கள் உள்ளன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: வேடந்தாங்கலைச் சுற்றுலாத் துறையின் கீழ் மேம்படுத்துவதற்குத் திட்டம் எதுவும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS